3—

பாலம்

*5005—**திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டியிலிருந்து ஜோதிமாணிக்கம் செல்லும் சாலையில் பாலத்தை மீண்டும் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், செல்லம்பட்டி—ஜோதிமாணிக்கம்—கொசவம்பட்டி வரையிலுள்ள சாலையில் 600—வது மீட்டரில் வெள்ளத்தால் சேதமடைந்துள்ள பாலத்தை ரூபாய் 17 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் நபார்டு திட்டத்தின்கீழ் புதுப்பித்துக் கட்டுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.*

திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டியிலிருந்து ஜோதிமாணிக்கம், கொசவம்பட்டி வழியாகச் செல்லும் சாலையில் கி.மீ. 0/6—ல் அமைந்துள்ள அந்தப் பாலம் மழையிலே அடித்துச் சென்றிருக்கிறது. அந்தப் பாலத்தைப் புதிதாகக் கட்டுவதற்கு அமைச்சரவர்கள் ஒப்புதல் அளித்தது வரவேற்கத்தக்கது. இருந்தபோதிலும், அந்தப் பகுதியைச் சூழ்ந்துள்ள சுமார் 20—க்கும் மேற்பட்ட கிராமச் சாலைகள் அந்த வழியாகச் செல்கின்றன. அந்தப் பாலப் பணிக்கு உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரி, அதை வருகின்ற மழைக் காலத்திற்குள் நிறைவேற்றிக் கொடுத்தால் மக்களுக்குப் பயனுடையதாக இருக்கும். அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

2007 அக்டோபர் 18]

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அடிப்படையிலே ஏறத்தாழ 3.4 கிலோ மீட்டர் நீளம் உடையது அந்தச் சாலை. அதிலே 600–வது மீட்டரில் ஜோதிமாணிக்கம் அருகிலுள்ள சாலையில் வெள்ளத்தால் பாலம் சேதமடைந்திருக்கிறது. இந்தப் பாலத்தை ரூபாய் 17 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் நபார்டு திட்டத்தின்கீழ் புதுப்பித்துக் கட்டுவதற்கு மதுரை திட்ட அலுவலர், கூடுதல் ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் ஊரக வளர்ச்சி இயக்குநருக்குக் கருத்துரு 19–7–2007–ல் அனுப்பப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூபாய் 38 இலட்சத்து 56 ஆயிரம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக மேம்படுத்த நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்ட கருத்துருவில் ரூபாய் 17 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் இந்தப் பாலமும் மேம்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

முற்பகல் 9–55

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 7–ல், நாமக்கல் மாவட்டத்தையும் கரூர் மாவட்டத்தையும் இணைக்கின்றவகையிலே பரமத்திவேலூருக்கும் புஞ்சைப்புரூர் ஊராட்சிக்கும் இடைப்பட்ட காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தில் கடந்த ஆட்சிக் காலத்திலே 21 சோடியம் விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்தன. அந்த சோடியம் விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணத்தை தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம் அளித்து வருகிறது. இந்த நிலையிலே 21 விளக்குகளிலே 4 விளக்குகள்தான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும், நீங்கள் கேட்பதற்கும் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள்.

வினா எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.